**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**C.C.No.203 of 2023**

அரசுதரப்பு **12 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரவி | வயது | : 57 |
| தந்தை/ கணவர் பெயர் | : கணபதி | தொழில் | : சிறப்பு உதவிஆய்வாளர் |
| கிராமம் | : மஞ்சகுப்பம் | ஜாதி | :-------- |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : |
| மாவட்டம் | :கடலூர் | மொபைல் | : 9443878400 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 13.02.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி முன்னிலை**.** வழக்கறிஞர் முன்னிலை

முதல் விசாரணை:

நான் தற்சமயம் முதுநகர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 27.03.2023ம் ஆண்டு காலை 10.00 மணியளவில் திருப்பாபுலியூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது மேற்கு ராமாபுரத்தை சேர்ந்த சிவபூஷ்ணம் மகன் சீனுவாசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.142/2023 ச/பி. 279, 304(A)இதச வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல்தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.** 6 ஆக குறியீடு செய்யப்பட்டது. முதல்தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இதர நகல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கை விசாரணைக்கு காவல் ஆய்வாளருக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகாரில் விபத்து நடந்த இடம் எதுவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சக்திவேல் வீட்டிற்கு எதிரில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்தகவல் அறிக்கையை பதிவு செய்த அன்றே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் எதிரி பெயரை பின்னிட்டு சேர்த்து அதன்பிறகு முதல்தகவல் அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் முதல்தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை-இல்லை</u>